தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.04/மா/2022**
**நாள். 25.05.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை – 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–05,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 1612.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2022 அன்று பெறப்பட்டு 01/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.12.2021 நாளிட்ட தனது மனுவில், “ சென்னை, இராயபுரம் பகுதி, மண்டலம் –05, பகுதி 12, வார்டு 51, M.C.road, கதவு (புதிய) எண்.91/1, (ஆறுமுகநாடார் மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில்) கட்டப்பட்ட இரண்டு மாடி வணிக கட்டிடம், சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எந்த கட்டிட அனுமதியும் பெறாமல் கட்டி முடிக்கப்பட்டது. இது தொடர்பாக நான் ஏற்கனவே சென்னை மாநகராட்சி, மண்டலம்–05ன் அலுவலகத்திற்கு புகார் அனுப்பியும் முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் பொதுமக்கள் அணுகும் வணிக கட்டிடமாகும். இதன் உறுதி தன்மை அவசியம் பரிசோதிக்கப்பட வேண்டும். மேலும் M.C. road, சாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய பகுதியாகும். அதற்கான செலவுத்தொகை, நிலம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் போன்றவற்றையும் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திடமிருந்து பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட அனுமதியற்ற வணிக கட்டிடம் மற்றும் அதன் உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்க சட்டப்படியான கடமைகள் இருந்தும் உரிய காலத்தில் முறையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய

அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது 01.11.2021 நாளிட்ட மனுவில் " சென்னை, இராயபுரம் பகுதி, மண்டலம் –05, பகுதி 12, வார்டு–52, M.C. road. புதிய கதவு எண். 98 பழைய எண். 65, S.Sekar textiles என்ற இரண்டு மாடி கட்டிடம் ஆகிய இரண்டு கட்டிடங்களும் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எந்த கட்டிட அனுமதியும் பெறாமல் கட்டி முடிக்கப்பட்டது. இது தொடர்பாக நான் ஏற்கனவே மண்டல அலுவலர் மண்டலம்–05 அலுவலகத்திற்கு புகார் அனுப்பியும் முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட இரண்டு அனுமதியற்ற கட்டிடங்களும் பொது மக்கள் அணுகும் வணிக கட்டிடங்களாகும். இதன் உறுதி தன்மை அவசியம் பரிசோதிக்கப்பட வேண்டும். மேலும் இந்த, M.C. road, சென்னை பெருநகர இரண்டாம் வளர்ச்சி திட்டப்படி சாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய பகுதியாகும். அதற்கான செலவுத்தொகை, நிலம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் போன்றவற்றையும் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடங்களிடமிருந்து பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட இரண்டு அனுமதியற்ற வணிக கட்டிடங்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு மண்டல அலுவலர், மண்டலம்–05 அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 29.01.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

3) மண்டல அலுவலர் தனது 16.05.2022 நாளிட்ட அறிக்கையில் " பெறப்பட்ட புகார் மனுக்கள் அடிப்படையில் கட்டிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டிட வரைபட நகல் கோரி கடந்த 08.07.2021 அன்று தாக்கீது வழங்கப்பட்டது. கட்டிட உரிமையாளர் கட்டிட வரைபட நகல் குறிப்பிட்ட நாட்களுக்குள் சமர்ப்பிக்காததால் LOCK AND SEAL தாக்கீது கடந்த 14.05.2022 அன்று வழங்கப்பட்டது. இந்நிலையில் கட்டிட உரிமையாளர் தாக்கீது பெற்றவுடன் 17.05.2022 அன்று 1975ல் பெறப்பட்ட கட்டிட வரைபட நகல் அளித்துள்ளார். மேலும் கட்டிட உரிமையாளரின் கட்டிடம் வரன்முறை செய்யப்பட இருப்பதாக தெரிவித்து, இரண்டு வாரம் அவகாசம் கேட்டுள்ளார். அதன்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் திரு. B. விஜயகுமார் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–05 ஆகியோர் 18.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 10.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

5) மனுதாரர் 18.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" சென்னை இராயபுரம் மண்டலம்–05, வார்டு 51, கதவு எண். 91/1, (ஆறுமுக நாடார் மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில் ) இரண்டு மாடி வணிக கட்டடம் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக புகார் மனுக்கள் மாநகராட்சிக்கு அனுப்பியும், புகார் மனுவின் மீது மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட அனுமதியற்ற கட்டடம் கட்டிய உரிமையாளர் மீதும், அனுமதியற்ற கட்டப்பட்டுள்ள கட்டடத்தின்

மீது முறையாக நடவடிக்கை எடுக்கத் தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –05ஐ சேர்ந்த உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் இருவரும் 16.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

" புகார் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை இராயபுரம் மண்டலம் –05, வார்டு 49, கதவு எண்.91/1,(ஆறுமுகநாடார் மேல்நிலைப்பள்ளி எதிரில்) இரண்டு மாடி வணிக கட்டடம் 1975–ல் கட்டப்பட்டது. அதன் மேல் தளம் மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. தற்போது கட்டடத்தின் வரைபட நகல் கோரி 08.07.2021 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்றும், 14.05.2022 அன்று Lock and Seal, and Demolition Notice கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மண்டல அலுவலர்–05 அவர்களின் 16.05.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பாக வழங்கப்பட்ட அறிவிப்புகளின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் " என தெரிவித்துள்ளனர்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–05ஐச் சேர்ந்த உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், மண்டலம்–05, மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் இராயபுரம் மண்டலம்–05, வார்டு 51, கதவு எண் 91/1 (ஆறுமுக நாடார் மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில்) இரண்டு மாடி வணிக கட்டடம் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக புகார் மனுக்கள் அனுப்பியும் மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட இரண்டு மாடி வணிக கட்டிடம் 1975ல் கட்டப்பட்டது எனவும் அதன் மேல் தளம் மாநகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்றும் தற்பொழுது எவ்வித கட்டுமானப்பணியும் நடைபெறவில்லை என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–05ன் அலுவலர்களின் வாக்குமூலம் வழியாக அறிய முடிகிறது. மேலும் கட்டடத்தின் வரைபட நகல் கோரி 08.07.2021 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டு 14.05.2022 அன்று Lock and Seal and Demolition Notice கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. 08.07.2021 க்கு பிறகு 14.05.2022ல் தான் Lock and seal and Demolition Notice கொடுக்கப்பட்டுள்ளது. பத்து மாத இடைவெளிக்கு பிறகு முறைமன்ற நடுவத்திலிருந்து கடிதம் சென்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது.

எனவே இந்நிகழ்வில் காலதாமத நடவடிக்கைகளுக்கும், உரிய முறைகளை பின்பற்றாமைக்கும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இப்பகுதி அலுவலர்(உதவி ஆணையர்) தனது பொறுப்புகளை உணராமல் செயல்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. மேற்பார்வை அலுவலர் என்ற முறையில் தன் பணியைச் சரிவர

செய்யாத இவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாநகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தப்படுகிறது மேலும் அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டலம் –05ன் மண்டல அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 25,–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத்தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
61, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.